ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடி – முன்னாள் எம்.பி.

# கோபி.வி.பி. சண்முக சுந்தரம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் குடும்பத்தினருக்கு ஆறுதல் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அஞ்சலி!

ஈரோடு, ஜூலை 21-

கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.பி.சண்முகசுந்தரம்,(வயது 76) நேற்று (20.7.2024 - சனிக்கிழமை) அதிகாலை 12.58 மணிக்கு கோவை தனியார் மருத்துவமனையில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த சண்முக சுந்தரம் மருமகனிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மறைந்த சண்முக சுந்தரத்திற்கு கனகாம்பாள் என்கிற மனைவியும், கனிமொழி, மதுமதி என்கிற இரண்டு மகள்களும் உள்ளனர். முதல் மகள் கனிமொழியின் கணவர் அன்பழகன் ஐ.ஏ.எஸ். மும்பை மாநிலத்தில் அரசு திட்டக்குழு இயக்குநராக பணியாற்றி வருகிறார். இரண்டாவது மகள் மதுமதியின் கணவர் நரேந்திரன் சாஃப்ட் வேர் இன்ஜினியராக பணியாற்றி வருகிறார்.



மறைந்த வி.பி. சண்முக சுந்தரம் கோபி அருகே யுள்ள வெள்ளாங்கோவில் கிராமத்தில் 29.6.1944ம் ஆண்டு பொன்னப்பன் - குட்டியம்மாள் தம்பதியர் மகனாக பிறந்தார். இவர் சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

**மிசா காலத்தில் கலைஞர் தலைமையில் மணவிழா!**

இவர் ஆரம்ப காலம் முதலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகத்தின் தீவிர தொண்டனாக கழக பணிகளில் ஈடுபட்டு வந்தார். மிசா நெருக்கடி காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1976 ம் ஆண்டு இவரின் திருமணத்தை வெள்ளாங்கோயிலில் நடத்தி வைத்தார். திருமணத்தின் போது மின்சாரம் துண்டிக்கப் பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைமைக் மூலம் உரையாற்றி மணமக்களை வாழ்த்தினார்.

**ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்!**

இவர் கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1991 மற்றும் 2001 ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கோபி சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டார். மீண்டும் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோபி நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் திறம்பட பணியாற்றினார்.

கழகத்திற்கு கடுமையான சோதனைகள் ஏற்பட்ட போது ஈரோடு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஈரோடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்தார்.

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - எஸ்.சுப்பராயன் எம்.பி. அஞ்சலி!**

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்ததும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருப்பூர் எஸ்.சுப்பராயன் எம்.பி., ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். நல்லசிவம் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி சடங்கு நேற்று (20.7.2024-சனிக்கிழமை) மாலை கோபி கரட்டடி பாளையத்தில் உள்ள ரோட்டரி கிளப் மின் மயானத்தில் நடைபெற்றது.

---

கழகம் அறிவித்த போராட்டங்கள்

## அனைத்திலும் பங்கேற்று சிறைசென்றவர் வி.பி.சண்முகசுந்தரம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 21-**

**நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினருமான கோபி வி.பி. சண்முகசுந்தரம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்து கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.**

கோபி வி.பி. சண்முக சுந்தரம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:

கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.பி.சண்முகசுந்தரம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

கழகப் பற்றாளராக விளங்கிய வி.பி.சண்முகசுந்தரம் அவர்கள், 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோபிச் செட்டிபாளையம் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் பணியாற்றியவர்.

இளம் வயது முதலே கழகப் பற்றாளராக விளங்கிய அவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கெடுத்தவர்.

அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், கழக உடன்பிறப்புகள் என அனைவருக்கும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

மு.தென்னவன் ஏற்பாடு! காரைக்குடியில் கலைஞர் தமிழ்ச்சங்கம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பட்டிமன்றம்

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! பட்டிமன்ற நடுவர்: சுகி சிவம்!

சிவகங்கை, ஜூலை 21-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் நிறுவனராக கலைஞர் தமிழ்ச்சங்கம் செயல்பட்டு வருகிறது . இந்த கலைஞர் தமிழ்ச்சங்கத்தில் கழகத்தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்கள் துவக்கி வைத்தார்.ஆண்டு தோறும் தமிழ் மொழிக்காக பாடுபட்ட திராவிட தலைவர்களின் புகழினை பாராட்டும் வகையில் பட்டிமன்றம், கருத்தரங்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது . 47 ஆண்டுகளாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வரும் இந்த கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் வருகிற 27ஆம் தேதிசனிக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு பட்டிமன்றம், மற்றும் கலைஞர் தமிழ் சங்கத்தின் 47வது ஆண்டு விழா நடைபெறுகிறது. இந்த விழா வருகிற 27ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4.00மணி அளவில் பி.எல்.பி.பேலசில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் தொழிலதிபர் பி.எல்.படிக்காசு முன்னிலையில் நடைபெறுகிறது.

காரைக்குடி மாநகர மேயர் எஸ்.முத்துதுரை வரவேற்றுப் பேசுகிறார் . இந்த நிகழ்ச்சியில். எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங்குடி ,முன்னாள் எம்.எல்.ஏ. சுப. துரைராஜ், காரைக்குடி மாநகர துணைமேயர் என்.குணசேகரன் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசுகிறார்கள். அதனைத் தொடர்ந்து கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் நிறுவனரும் முன்னாள் அமைச்சருமான மு.தென்னவன் கலைஞர் நூற்றாண்டு நிறைவு சிறப்பு பட்டிமன்ற தொடக்க உரை ஆற்றுகிறார். அதனை தொடர்ந்து சொல்வேந்தர் சுகி.சிவம் தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம் எழுதுகோலே , செங்கோலே என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெறுகிறது. இதில் எழுதுகோலே என்ற தலைப்பில் திருமதி சாந்தாமணி எழுத்தாளர் இலக்குமண பெருமாள் , கவிஞர் திருமதி ஆண்டாள்பிரியதர்ஷினி ஆகியோரும், செங்கோலே என்ற தலைப்பில் மதுக்கூர் ராமலிங்கம், திருமதி எழிலரசி, நகைச்சுவை பேச்சாளர் மோகனசுந்தரம் ஆகியோர் வாதாடுகிறார்கள்.

கலைஞர் தமிழ் சங்க பொருளாளர் தி.செந்தில் குமார் நன்றி கூறுகிறார். முன்னதாக பகல்3.00. மணிக்கு காரைக்குடி அபி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது . நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சரும் கலைஞர் தமிழ்ச்சங்கத் தின் நிறுவனருமான மு.தென்னவன் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி மற்றும் கலைஞர் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

---

‘அம்மா’ உணவகத்தை ஆய்வு செய்த முதல்வரின் பெருந்தன்மையைப் பாராட்ட மனமின்றி

# பொறாமையிலும் ஆற்றாமையிலும் புலம்புகிறார் எடப்பாடி பழனிச்சாமி!

## சென்னை மேயர் பிரியா ராஜன்– ‘எக்ஸ்’ வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 21-**

**அம்மா உணவகத்தை ஆய்வு செய்த முதலமைச்சரின் பெருந்தன்மையை பாராட்ட மனமின்றி பொறாமையிலும் ஆற்றாமையிலும் எதிர்க்கட்சித் தலைவர் புலம்பித் தவிக்கிறார் என சென்னை மேயர் பிரியா ராஜன் ‘எக்ஸ்’ தளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



அவரது பதிவு வருமாறு:

கழக ஆட்சியில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மையை பாராட்ட எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு மனமில்லை!

கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராக, மக்கள் நலன் ஒன்றையே மனதில் வைத்து நாளும் தொண்டாற்றும் மனிதநேயராக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள்;

அவரது அகராதியில் அரசியல் காழ்ப்புணர்வு என்ற சொல்லோ, சிறுமதியோ ஒருநாளும் இருந்தது இல்லை.

தி.மு.க. அரசால் தொடங்கப்பட்டது என்பதற்காகவே புதிய தலைமைச் செயலகம் உட்பட அ.தி.மு.க. ஆட்சியில் முடக்கப்பட்ட திட்டங்கள் எத்தனை எத்தனை என்பதை மக்கள் அறிவர். அதனைப் பற்றி கொஞ்சமும் கூச்சமின்றி பொறாமையிலும் ஆற்றாமையிலும் எதிர்க்கட்சித் தலைவர் புலம்பித் தவிக்கிறார்.

இவ்வாறு அப்பதிவில் மேயர் பிரியாராஜன் குறிப்பிட்டுள்ளார்.

---

உச்சநீதிமன்றம் உத்தரவைத் தொடர்ந்து

# தேர்வு மையங்கள் வாரியாக ‘நீட்’ தேர்வு முடிவுகள்!

## தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது!

புதுடெல்லி, ஜூலை 21-

இளநிலை நீட் தேர்வு கடந்த மே 5ம் தேதி நடைபெற்றது. 14 நகரங்களில் 571 மையங்களில் இந்த தேர்வுகள் நடைபெற்றன. இதில், வினாத்தாள் கசிவு, கருணை மதிப்பெண் வழங்கிய விவகாரம், ஆள் மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி பாதிக்கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்குகள் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒன்றிய அரசு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், நீட் கேள்வித்தாள் கசிவு குறித்து பீகார் போலீசார் நடத்திய விசாரணை அறிக்கையை தாக்கல் செய்யுமாறு ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டனர். நீட் முறைகேட்டால் எத்தனை மாணவர்கள் பயனடைந் துள்ளார்கள் என்பதை கண்டறியும் வகையில் நகரங்கள், தேர்வு மையங்கள் வாரியாக நீட் தேர்வு முடிவுகளை ஜூலை 20 நண்பகல் 12 மணிக்குள் வெளியிட வேண்டும் என தேசிய தேர்வு முகமைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மாணவர்களின் பெயர்களை மறைத்து மதிப்பெண் விவரங்களை பொது வெளியில் வெளியிட வேண்டும் என்றும் தெரிவித்த நீதிபதிகள், வழக்கு விசாரணையை வரும் 22ம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

இந்நிலையில்,நகரங்கள், தேர்வு மையங்கள் வாரியாக நீட் தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.

---



மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி வாடிப்பட்டி ஒன்றியம் ஆண்டிபட்டி ஊராட்சியில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் கீழ் மக்கள் நல பயன்களுக்கான முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., வட்டாட்சியர் ராமச்சந்திரன், ஒன்றிய ஆணையாளர் கதிரவன், வாடிப்பட்டி பேரூராட்சி சேர்மன் பால்பாண்டியன், துணை சேர்மன் கார்த்திக், ஊராட்சி மன்ற தலைவர் மீனாள், கழக நிர்வாகிகள் பாலா ராஜேந்திரன், பூச்சம்பட்டி சீனிவாசன், பிரகாஷ், எல்.எஸ். அய்யாவு, ஜெயகாந்தன், அயோத்தி, முருகன், அய்யங்கோட்டை விஜி, முரளி, விநோத் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள், அதிகாரிகள் உள்ளனர்.



கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், ஈரோடு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான வி.பி.சண்முகசுந்தரம் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கழகக்கொடி போர்த்தி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம், ஊத்துக்குளி ஒன்றிய கழக செயலாளர்கள் பி.பி.ஈஸ்வரமூர்த்தி, சுப்பிரமணியம் உட்பட பலர் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்டம் சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட 6வது கோட்டத்தில். மாவட்ட கழக செயலாளரும் சேலம் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான இரா. இராஜேந்திரன் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி அவைகளை உடனடியாக நிறைவேற்றி தர கேட்டுக்கொண்டு மனுக்களை அதிகாரிகளிடம் வழங்கினார். உடன் சேலம் மாநகராட்சி மேயர். ஆ.ராமச்சந்திரன் உள்ளார்.